ஃபெஞ்சல் புயலால் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி சென்னகுணம் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதம சிகாமணி, மாவட்டப் பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , மாவட்ட துணைச் செயலாளர்கள் இரா.கற்பகம், தயா இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர் சு.விசுவநாதன், ஒன்றிய குழு உறுப்பினர் காடுவெட்டி சிவா, நெசவாளர் அணி அமைப்பாளர் ஞானவேல், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

திருச்சி மாநகரம் - மதிவாணன் முன்னிலையில்

16வது வார்டு மகளிர்க்கு இலவச அஞ்சலக சேமிப்பு வைப்புத் தொகை!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சேமிப்பு அட்டை வழங்கினார்!

திருச்சி, டிச. 5 - தமிழக துணை முதல்வரும் திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ் நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோரின் பிறந்த தினத்தை முன்னிட்டு திருச்சி மாநகராட்சி 16வது வார்டுக்கு உட்பட்ட மகளிர்க்கு இலவச அஞ்சலக சேமிப்பு வைப்புத் தொகை திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டு சுமார் ஆயிரம் மகளிருக்கு அவர்களது வங்கிக் கணக்கில் வைப்புத் தொகை செலுத்தி அன்றாடம் தங்களின் வரவுகளை சேமிக்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைக் கப்பட்டது . இந்நிகழ்வில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் தமிழ் நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு மகளிருக்கு சேமிப்பு வைப்பு தொகை அட்டையை வழங்கினார். கிழக்கு மாநகரச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் மதிவாணன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் திருச்சி தலைமை அஞ்சலக முதுநிலை அதிகாரி ராஜ்குமார், துணை அஞ்சலக அதிகாரி சீனிவாசன் மற்றும் பகுதி கழகச் செயலாளர் விஜயகுமார், வட்டக் கழகச் செயலாளர்கள் தங்கவேலு, சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்த னர் .

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது: இந்த மேடையில் நாங்கள் அமர்வதற்கு காரணமான தாய்மார்களை வணங்குவதாகவும் தமிழக துணை முதல்வர் மற்றும் எனது பிறந்த நாளை முன்னிட்டு 16வது வார்டு மாமன்ற உறுப்பினரும் மண்டலக்குழு தலைவருமான மதிவாணன் 16வது வார்டுக்கு உட்பட்ட சுமார் ஆயிரத்தி ற்கும் மேற்பட்ட பெண்களுக்கு அஞ்சலக சேமிப்பு வைப்புத் தொகை திட்டத்தை அறிமுகப்படுத்தி அதில் பெண்களுக்கு வங்கி கணக்கில் ரூபாய்100.00 செலுத்தியுள்ளார் என்றும் நானும் இந்த 16 வது வார்டுக்கு உட்பட்டவன் என்ற முறையில் எனது மனைவி பெயரிலும் வங்கி கணக்கு புத்தகம் துவக்கி அதில் 100 ரூபாய் செலுத்தியுள்ளார் தமிழக முதல்வர் அவர்கள் மகளிருக்காக கலைஞர் உரிமைத்தொகை மகளிருக்கு இலவச பேருந்து உட்பட பல்வேறு மகளிர் நலன் சார்ந்த திட்டங்களை உருவாக்கி சிறப்பான ஆட்சி நடத்தி வருவதாகவும் இதை பயன்படுத்தி மகளிர் அனைவரும் பயன் பெற வேண்டும் என்றும் இந்த சேமிப்பு திட்டத்தை மகளிர் ஆகிய நீங்கள் கைவிடாமல் இதை தொடர வேண்டும் என வும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி கிழக்கு மாநகர செயலாளர் மண்டலக்குழு தலைவருமான மதிவாணன் முன்னிலையில் 16வது வார்டு மகளிர்க்கு இலவச அஞ்சலக சேமிப்பு வைப்புத் தொகை திட்ட துவக்க விழா நடைபெற்றது. இதனை முன்னிட்டு திருச்சி மாநகராட்சி 16வது வார்டுக்கு உட்பட்ட மகளிர்க்கு இலவச அஞ்சலக சேமிப்பு வைப்புத் தொகை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் ஆயிரம் மகளிருக்கு அவர்களது வங்கிக் கணக்கில் வைப்புத் தொகை செலுத்தி அன்றாடம் தங்களின் வரவுகளை சேமிக்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது . இந்நிகழ்வில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு மகளளிருக்கு சேமிப்பு வைப்பு தொகை அட்டையை வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் திருச்சி தலைமை அஞ்சலக முதுநிலை அதிகாரி ராஜ்குமார், துணை அஞ்சலக அதிகாரி சீனிவாசன் மற்றும் பகுதி கழகச் செயலாளர் விஜயகுமார், வட்டக் கழகச் செயலாளர்கள் தங்கவேலு, சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் . விழாவில் பேசிய அமைச்சர் இந்த மேடையில் நாங்கள் அமர்வதற்கு காரணமான தாய்மார்களை வணங்குவதாகவும் தமிழக துணை முதல்வர் மற்றும் எனது பிறந்த நாளை முன்னிட்டு 16வது வார்டு மாமன்ற உறுப்பினரும் மண்டலக்குழு தலைவருமான மதிவாணன் அவர்கள் 16வது வார்டுக்கு உட்பட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு அஞ்சலக சேமிப்பு வைப்புத் தொகை திட்டத்தை அறிமுகப்படுத்தி அதில் பெண்களுக்கு வங்கி கணக்கில் ரூபாய்100.00 செலுத்தியுள்ளார் என்றும் நானும் இந்த 16 வது வார்டுக்கு உட்பட்டவன் என்ற முறையில் எனது மனைவி பெயரிலும் வங்கி கணக்கு புத்தகம் துவக்கி அதில் 100 ரூபாய் செலுத்தியுள்ளார் தமிழக முதல்வர் அவர்கள் மகளிருக்காக கலைஞர் உரிமைத்தொகை மகளிருக்கு இலவச பேருந்து உட்பட பல்வேறு மகளிர் நலன் சார்ந்த திட்டங்களை உருவாக்கி சிறப்பான ஆட்சி நடத்தி வருவதாகவும் இதை பயன்படுத்தி மகளிர் அனைவரும் பயன்பெற வேண்டும் என்றும் இந்த சேமிப்பு திட்டத்தை மகளிர் ஆகிய நீங்கள் கைவிடாமல் இதை தொடர வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

அனைத்து சமுதாய நலக் கூடங்களும் டிசம்பர் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்!

ரூ.65 கோடியில் - வடசென்னை பகுதியில் 7 சமுதாய நலக்கூடங்கள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, டிச.4- முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.65 கோடி மதிப்பீட்டில் வடசென்னை பகுதியில் 7 சமுதாய நலக்கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து சமுதாய நலக்கூடங்களும் டிசம்பர் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று சேத்துபட்டு, ஹாரிங்டன் சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.10 கோடியில் கட்டப்படவுள்ள சமுதாய நலக்கூடத்தை ஆய்வு செய்தபின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (3.12.2024) வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, மண்டலம்8, வார்டு 96, நியூ ஆவடி சாலை, காந்தி நகரில் ரூ.85.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய 500 எண்ணிக்கையிலான குடியிருப்புகளையும், எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, மண்டலம்8, வார்டு 108, சேத்துபட்டு, ஹாரிங்டன் சாலையில் சிஎம்டிஏ சார்பில் ரூ.10 கோடியில் கட்டப்படவுள்ள சமுதாய நலக்கூடத்தையும், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டலம்5, வார்டு60, இராயபுரம், கிளைவ் பேட்டரியில் சிதலமடைந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்புகளை யும், மண்டலம்5, வார்டு57, ஜார்ஜ் டவுன், பிராட்வே சாலை, பி.ஆர்.என் கார்டனில் ரூ.85.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய 504 குடியிருப்புகளையும் மற்றும் மண்டலம்5, வார்டு59, எல்லிஸ் புரத்தில் சிதலமடைந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்புகளையும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகளின் போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், மண்டலக் குழுத்தலைவர்கள் கூ. பீ.ஜெயின், ஸ்ரீராமலு, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ர மூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, சி.எம்.டி.ஏ. கண்கா ணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர் திருமதி. விஜய குமாரி, மண்டல அலுவலர்கள் சுரேஷ், திருமதி. பரிதா பானு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.தனலட்சுமி, எம்.இசட்.ஆசாத், பரிமளம் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழக அரசின் துரித நடவடிக்கையால்

கிருஷ்ணகிரி மாவட்டம் இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளது!

கிருஷ்ணகிரி, டிச. 5 - தமிழகம் முழுவதும் கடந்த சில தினங்களாக புயல் மழையால் ஒரு சில மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு திடீரென பெய்த பலத்த மழையால் ஊத்தங்கரை, போச்சம்பள்ளி பகுதியில் பலத்த மழை பெய்தது. மாவட்ட நிர்வாகம் உடனடியாக துரித நடவடிக்கை மேற்கொண்டு நீர்நிலை யில் சிக்கித் தவித்த மக்களை மீட்டு ஏழு முகாம்கள் அமைத்து அவர்களுக்கு வேண்டிய உணவு, மருத்துவ உதவி அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தகவல் அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி பொறுப்பு அமைச்சராக நியமித்து துரிதநடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் நேரில் வந்து பாதிப்படைந்த மக்களை சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். அமைச்சர் சு.முத்துசாமி கடந்த இரண்டு தினங்களாக பாதிப்படைந்த பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக சேத விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு தினங்களாக அந்த பகுதியில் மழை பெய்யாமல் உள்ளதால் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளது. குடியிருப்பு பகுதியில் புகுந்த தண்ணீர் வடிந்துள்ளது தொடர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் அவர் அவர்களது இல்லங்களுக்கு திரும்பி வருகின்றனர்

இதனால் அந்த பகுதியில் இயல்பு நிலை திரும்பி உள்ளது. ஊத்தங்கரை, போச்சம்பள்ளி சுற்றுப்பகுதி களில் துண்டிக்கப்பட்டு இருந்த சாலைகள் சீரமைக்கப்பட்டு தற்போது சாலை போக்குவரத்து வழக்கம் போல் நடைபெற்று வருகிறது.

மாவட்ட நிர்வா கத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் கே. எம். சரயு, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சில்பாபிரபா கர் சதீஷ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மதியழகன், பிரகாஷ் உள்ளிட்டார் கடந்த இரண்டு தினங்களாக அந்தப் பகுதியிலே முகாமிட்டு நிவாரணங்களை செய்து வருகின்றனர். மாவட்ட நிர்வாகமும், திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும் உரிய நடவடிக்கை மேற்கொண்டதால் அந்தப் பகுதிகளில் தற்போது இயல்பு நிலை திரும்பி உள்ளது.

தருமபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன் ஏற்பாட்டில் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி சோகத்தூர் ஊராட்சியில் மெர்சி ஹோமில் உள்ள 100 ஆதரவற்றோர்களுக்கு,மதிய அசைவ உணவு வழங்கினார்.உடன் தர்மபுரி மேற்கு ஒன்றிய செயலாளர் டி.எல்.காவேரி,மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ்,மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி,ஒன்றிய செயலாளர் வீரமணி,ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ்,தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் உதயசூரியன் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

தருமபுரி காளிக்கரம்பு வனப்பகுதி

மக்களுக்கு சாலை வசதி அமைத்திடுக!

மக்களவையில் தருமபுரி ஆ.மணி கோரிக்கை!

புதுடெல்லி, டிச. 5 - தருமபுரிமாவட்டம்,தருமபுரிஒன்றியத்திற்கும்,பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்திற்கும்இடையேகொண்டகரஹள்ளி ஊராட்சியில் உள்ளகாளிக்கரம்புவனப்பகுதி வழியாக சாலை அமைத்து தரக்கோரி அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.அதன்படிஅப்பகுதியில்சாலைஅமைப்பது குறித்து தருமபுரி எம்.பி.ஆ.மணி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்தில், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் பாப்பிரெட்டிப்பட்டி,மெனசி,பையர் நத்தம்,மணலூர்,கொப்பக்கரை, துறிஞ்சிப்பட்டி, பொம்மிடி,போதகாடு,உள்ளிட்ட 50 கிராமங்களில் வாழும் மக்களின் பயணம் சுமார் 30 கி.மீ. வரை குறையும்.இதனால் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்,இணைக்கப்படாத கிராமப்புற வாழ்விடங்களை சாலை வசதியுடன் இணைக்கும் நோக்கில் செயல்படுத்தப்படுவதேபிரதமரின் கிராமப்புற சாலை திட்டம் எனவே காளிக்கரம்பு வனப்பகுதி வாழ்விட மக்களுக்கு சாலை வசதி அமைக்கஎதுவாகபிரதமரின் கிராமப்புற சாலை திட்டத்தின் கீழ் ஒருதுணை திட்டத்தை உருவாக்கி அத்திட்டத்தினை நிறைவேற்றி தர வேண்டும் என்று மத்திய கிராமப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகானிடம்தருமபுரிநாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கோரிக்கை விடுத்துள்ளார்.

திருமானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் - துணை முதல்வர்

உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா - தெருமுனைக் கூட்டம்!

இரா.கென்னடி – குடந்தை பாஸ்கர் – க.செல்வமணி சிறப்புரை!

அரியலூர், டிச. 5 - திருமானூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில், கழக இளைஞரணிசெயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின்பிறந்தநாள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின்திராவிடமாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரம் கூட்டம் மாவட்ட கழக செயலாளர்,தமிழ்நாடுஅரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டுதலின்படி ஒன்றிய கழக செயலாளர் இரா. கென்னடி தலைமையில், ஒன்றிய அவைத்தலைவர் கே.ஜி.எஸ்.முருகன், மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ்செல்வன், ஆர். ஜி.மணிவேல், எஸ்.பி.எஸ். பழனிசாமி, ஆர்.வி.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில்அரசஞ்சேரிகிராமத்தில் நடைபெற்றது.

முன்னதாகக.மதியழகன் அனைவரையும் வரவேற்றார்.

தலைமை கழக சொற்பொழிவாளர் குடந்தை பாஸ்கர், என் உயிரினும் மேலான இளம் கழக சொற்பொழிவாளர்க.செல்வமணி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் லதா பாலு, மாவட்ட கவுன்சிலர் கீதா ஜெயவேல், ஒன்றிய துணைசெயலாளர்கள்எஸ். ராஜா, மணிகண்டன், கோகிலா வரதராஜன், ஒன்றியபொருளாளர் ஆனஸ்ட் அம்பிகாவதி, மாவட்டவிவசாய அணி துணை அமைப்பாளர் துரை.தியாகராஜன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன்,

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எம்.இலக்கியதாசன்,

ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எல்.கே.அருண்,பெ.கருணாநிதி,

ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ்,ஒன்றியதொண்டரணி அமைப்பாளர் முருகானந்தம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் இராசிபுரம் ஒன்றியம், சந்திரசேகரபுரம் ஊராட்சி அதிமுக கிளை செயலாளர் பி.காமராஜ் மற்றும் வார்டு உறுப்பினர் ஆர்.சந்திரா ஆகியோர் தலைமையில் 100 க்கும் அதிமுகவிலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் ஒன்றிய கழக செயலாளர் கேபி.ஜெகநாதன், மாவட்ட பொருளாளர் ஏகே.பாலசந்தர், ஒன்றிய கழக செயலாளர்கள் கேபி. இராமசுவாமி, அ.அசோக்குமார் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் கடலூர் குண்டு சாலை, வெளிச்செம்மண்டலம் மற்றும் ஊராட்சி பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. கடலூர் அடுத்த பெரிய கங்கணாங்குப்பம், வெளிசெம்மண்டலம், குறிஞ்சி நகர், விஎஸ்எல் நகர், நடேசன் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்த பகுதிகளை அய்யப்பன் எம்.எல்.ஏ. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அப்பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு அய்யப்பன் எம்.எல்.ஏ பிரட், பிஸ்கட் மற்றும் உணவு வழங்கினார். பின்னர் குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்துள்ள தண்ணீரை உடனடியாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர் அப்போது டாக்டர் பிரவீன் அய்யப்பன், கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், நிர்வாகிகள் பரத் ரெட்டியார், அண்ணாதுரை, வார்டு உறுப்பினர் பிரபாவதி, குமார், எல்.ஐ.சி. வேணு, மனோஜ் குமார், பவித் குமார், ஜீவா, அஸ்வின் மற்றும் பலர் உடன் இருந்தனர்.